**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 193/2023**

**Prosecution Witness : 9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. மன்சூர் அலி** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. சேக் அப்துல்லா** | **Calling** | : | |
| **Village** | : | **A.P. Nagar, குடைப்பாறைப்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **25** |
| | | | **Dated** | : | **30.07.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**A1 and A2 present.**

அ.சா. 9 (பட்டியல் சாட்சி 8), **திரு. மன்சூர் அலி** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து லோடு மேனாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. நான் ஜஸ்டின் என்பவரது மரக்கடையில் லோடு மேனாக வேலை பார்த்தேன். அசா. 1 முதல் அசா. 3 வரை உள்ளவர்களைத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகிவற்றில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். அந்த கையெழுத்துக்கள் முறையே **Ex. P4 and Ex. P5**. சுமார் 2 ½ வருடங்களுக்கு முன்பு வத்தலக்குண்டு பாலம் அருகே நானும், சுரேந்தர் என்பவரும் நின்று கொண்டு இருந்தபோது, போலீசார் வந்து விசாரித்து கொண்டு இருந்தனர். அதற்காக நான் கையெழுத்துப் போட்டுக்

கொடுத்தேன். அங்கு எதிரிகளை நான் பார்க்கவில்லை. வழக்கு பற்றி வேறு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலீசார் விசாரணையில் கடந்த 05.12.2023ம் தேதி மதியம் 02.15 மணிக்கு, திண்டுக்கல் – வத்தலக்குண்டு ரோடு குட்டியபட்டி பஸ் ஸ்டாப் அருகே நின்று கொண்டு இருந்தபோது, திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் எதிரிகள் சரவணக்குமார் மற்றும் கோவிந்தராஜ் என்பவர்களை விசாரித்தபோது, எதிரி சரவணக்குமார் என்பவர் எவ்வித வற்புறுத்துதலும் இல்லாமல் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும், சாட்சி சுரேந்தர் என்பவர் முன்னிலையிலும் பதிவுசெய்தார் என்றும், அதன் அடிப்படையில் அன்றைய தினமே 03.45 மணிக்கு எங்கள் முன்னிலையில் வத்தலக்குண்டு பைபாஸ் ரோடு கருப்பண சாமி கோவில் பின்புறம் அழைத்துச் சென்று, சரவணக்குமார் வழக்கு சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை எடுத்து ஆஜர் செய்ய அதை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் என்றும், அதற்காக சாட்சி கையெழுத்து போட்டுவிட்டு, உண்மையை மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

R V RAJA KUMAR

Digitally signed by R V RAJA KUMAR
Date: 2025.07.30 18:16:11 +0530